தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

தேதி: 06.02.2023

அன்புள்ள ஐயா அவர்களுக்கு,

வணக்கம்.

தமிழ்நாட்டில் TNPSC மற்றும் SSC, IBPS, RRB ஆகிய முகமைகள் நடத்தும் வேலை வாய்ப்புக்கான போட்டித் தேர்வுகளை உரிய வகையில் எதிர் கொள்வதற்கான கட்டணமில்லாப் பயிற்சி வகுப்புகள், தமிழ்நாடு அரசின் சார்பில், கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் புதிதாக தொடங்கப்பட உள்ள போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம் மூலம் வழங்கப்பட உள்ளது.

இப்பயிற்சிக்கான துவக்க விழா நாளை (07.03.2023 - செவ்வாய்க்கிழமை) காலை 10.45 மணியளவில் தமிழ்நாட்டின் தலைமைச் செயலாளர் மற்றும் பயிற்சி துறை தலைவர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., அவர்களால், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழக துணைவேந்தர், முனைவர் வெ.கீதாலட்சுமி, அவர்கள் முன்னிலையில் காணொளி காட்சி வாயிலாக துவக்கி வைக்கப்படவுள்ளது. இந்நிகழ்வு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக அண்ணா அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வைத் தொடர்ந்து, பத்திரிக்கையாளர் சந்திப்பானது உழவியல் துறை ஃப்ரீமேன் ஹால் அரங்கில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ. கீதாலட்சுமி அவர்கள் தலைமையில் நாளை **(07.03.2023 – செவ்வாய்க்கிழமை) காலை 10.30 மணியளவில்** நடைபெறவுள்ளது.

எனவே, தங்களுடைய மேலான **நிருபர் மற்றும் புகைப்பட / காணொலி நிருபர்** இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, தங்களுடைய மேலான நாளிதழ் / தொலைக்காட்சி / பத்திரிகையில் செய்தியினை வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற தங்களுடைய மேலான ஒத்துழைப்பை நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி !

மக்கள் தொடர்பு அலுவலர்

பெறுநர்,
ஆசிரியர் / நிருபர் / புகைப்பட நிருபர் / காணொலி நிருபர்